www.Padasalai.Net www.CBSEtips.in

வே .போதுராசா-தேனி

# காலாண்டுத்தேர்வு மாதரி தேர்வு

**மொழிப் பாடம் பகுதி I தமிழ்**

**கால அளவு:** 3.00 மணி நேரம் ] **மதிப்பெண்கள்** : 90 ]

**அறிவுரைகள்** : 1) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.
2) விடைகள் தெளிவாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**பகுதி – I**

**குறிப்பு** : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**14x1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. பயனே – புளிமா = மா முன் நிரை வந்த
அ) வெண்சீர் வெண்டனை ஆ) இயற்சீர் வெண்டளை
இ) மாச்சீர் ஈ) விளச்சீர்

2. தமிழ்க் கல்லூரியாகவும் வடமொழிக் கல்லூரியாகவும் இருந்த மடம்
அ) திருவாவடுதுறை மடம் ஆ) தருமபுரம் மடம்
இ) மேற்கூறிய இரண்டும் ஈ) திராவிட வித்தியா பூஷணம்

3. மதுரை பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருந்தவர்
அ) மா.இராசமாணிக்கனார் ஆ) நாவலர் சோமசுந்தர பாரதியார்
இ) ப.சுப்பிரமணியனார் ஈ) வ.சுப. மாணிக்கம்

4. நேரிசை வெண்பாவில் இரண்டாமடியில்__________
அ) இன்னிசை வெண்பா வரும் ஆ) கலிவெண்பா வரும்
இ) நேரிசை வெண்பாவரும் ஈ) தனிச்சீர் வரும்

5. பொருத்துக.
அ) நெடுங்கணக்கு - அரசாணை
ஆ) சட்டாம் மிள்ளை - ஓலைச்சுவடி
இ) தூக்கு - அரிச்சுவடி
ஈ) சாஸனம் - வகுப்புத் தலைவன்
அ) 3, 4,1,2 ஆ) 3, 2, 4,1 இ) 2, 3,1,4
ஈ) 2, 4, 3,1

6 எழுத்தாணிகள் எத்தனை?
அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

7. தோப்பில் முகமது மீரான் பிறந்த ஆண்டு
அ) 1940 ஆ) 1944 இ) 1940 ஈ) 1943

8. **கூற்று** : எதுகை மோனை சேர்க்காமல், அடியளவை அறிந்திடாமல் வார்க்கின்ற வடிவந்தான் வசனம்
**காரணம்** : எளிய மக்கள் பேசும் எளிய சொற்கள் தொடர்களாக அமைவதே உரைநடை.
அ) கூற்று சரி காரணம் தவறு ஆ) கூற்று தவறு காரணம் சரி
இ) கூற்று சரி காரணம் சரி ஈ) கூற்று தவறு காரணம் தவறு

9 மறியிடைப் படுத்த மான்பிணைபோல் இவ்வடிகள் இடம்பெறும் நூல்
அ) புறநானூறு ஆ) கலித்தொகை இ) ஐங்குருநூறு ஈ) அகநானூறு

10. **'Affidavit'** – என்பதன் தமிழாக்கச் சொல்
அ) சாட்டுரை ஆ) ஆணையுறுதி ஆவணம்
இ) அதிகார எல்லை ஈ) தண்டனை

11. 'புரிகுழல்' – என்பது
அ) மூங்கில் ஆ) சுருண்ட கூந்தல்
இ) இன்னிசைக் கருவி ஈ) இடக்கை வாத்தியம்

12. பொருந்தாததைத் தேர்க:
அ) பழம் - சாறு

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

ஆ) தண்ணீர் - ஏர்
இ) அடி - இரண்டுசீர் இடை
ஈ) பா - தொடை நன்கு அமை

13. 'மாசி' - காணப் பெறும் விழா
அ) தைப்பூச விழா ஆ) ஓணவிழா
இ) கடலாட்டு விழா ஈ) திருவாதிரை விழா

14 குறள் என்பது …….
அ) நாலடிவெண்பா ஆ) மூன்றடி வெண்பா
இ) இரண்டடி வெண்பா ஈ) ஆறடி வெண்பா

## பகுதி – II ( பிரிவு – 1)

**குறிப்பு**: எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடை தருக. 3 x 2= 6

15. வள்ளலார் வகுத்த நெறிகள் யாவை?
16. யாழின் வகைகள் யாவை? விளக்குக?
17. தேவாரம் குறிப்பு வரைக.
18. சினம் எதைக் கொள்ளும்?

### பிரிவு - 2

**குறிப்பு**: எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. 2 x 2= 4

19. "கீழ்த்திசைச் சுவடிகள்" குறித்து எழுதுக?
20. உ.வே.சா பெற்ற பட்டங்களைக் கூறுக?
21. எழுத்தாணி எத்தனை வகைப்படும் அவை யாவை?

### பிரிவு – 3

**குறிப்பு**: எவையேனும் **ஏழு** வினாக்களுக்கு விடை தருக.

22. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக
(அ) ஒருமையுடன் ஆ) எத்திசை
23. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க - "**தலைமை**"
24. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக
அ) அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.
ஆ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.
25. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.
சருகு, விழு, மண், அலை
26. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக:
அ) ரங்கன் வெங்கலப் பாத்திரக் கடை வைத்திருக்கிறார்
ஆ) ஐப்பசி அடைமழையில் ஊருணி நிரைந்தது.
27. மூன்றாவது சீர் அமைத்து எழுதுக?
அ) அவமதிப்பும் ஆன்ற ________
ஆ) கல்லாரெ ஆயினும் ________
28. இலக்கணம் குறிப்பு தருக.
அ) தொல் நெறி ஆ) மாமயிலை
29. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பலக்கணம் தருக:
அ) பேசுவார் ஆ) அமர்ந்தான்
30. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?

## பகுதி – III ( பிரிவு – 1)

**குறிப்பு**: எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. 2 x 4= 8

31. பாடாண்திணையை சான்றுடன் விளக்க?
32. சுரதா- குறிப்பு வரைக.
33. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்.
34. எவற்றையொல்லாம் விட நன்றி பெரியது ?- திருக்குறள் வழி விவரிக்க.

### பிரிவு – 2

**குறிப்பு**: எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. 2 x 4= 8

35. பண்டைய காலக் கல்வியில் வாதம் புரிதல் வழக்கமாக இருந்தது என்பதை விளக்குக.
36. "மையாடல்" என்றால் என்ன?
37. பள்ளிகள் - பெயர் பெற்ற காரணத்தை விளக்குக?
38. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

### பிரிவு – 3

Padasalai.Net

**குறிப்பு**: எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடை தருக. **3x4=12**

39. "உவமையணியினை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

40. ஊழி பெயரினும் தாம் பெயரார் (அல்லது) வினை விதைத்தவன் வினை அறுப்பான்.
– பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.

41. வெண்பாவிற்கான பொது இலக்கணம் எழுதுக?

42. கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.

1. நேற்று முதல் ____________ (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
2. உங்களுக்கு _____________ (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.
3. முருகன் _____________ (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை
4. நம்முடைய _____________ (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்

43. எண்ணங்களை எழுத்தாக்குக.



**பகுதி – IV**

**குறிப்பு**: **அனைத்து** வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. **3x6=18**

44. (அ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாக சுரதா கூறுவனவற்றை விவரிக்க?

**(அல்லது)**

(ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவிக – நிறுவுக

45. அ) பண்டையக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக?

**(அல்லது)**

ஆ) தாய்வழிக்குடும்பம், தந்தைவழிக்குடும்பம் தனிக்குடும்பம் குறித்து ஆசிரியர் கூறும் கருத்து யாது?

46. (அ) கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன – தலைக்குளம் கதையின்றி உங்கள் கருத்தை விவரிக்க.

**(அல்லது)**

(ஆ) "சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு" கூற்று நனவாக நாம் செய்யவேண்டியவை யாவை?

**பகுதி – V**

**குறிப்பு**: அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. **4 + 2 = 6**

47. (அ) **"தெய்வமணிமாலை"** – எனத் தொடங்கும் மனப்பாடப் பாடலை எழுதுக.
(ஆ) **"உடைத்து"** – என முடியும் குறளை எழுதுக.

வே .போதுராசா-தேனி

Padasalai.Net